# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் நாடு தொலை தொடர்பு ஒப்பந்த தொழிலாளர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:169** **தேதி:11.09.2014.**

## பொறுப்பதிற்கில்லை தோழா! பொங்கி எழுவோம்!

அன்பார்ந்த தோழர்களே,

வேலூர் ஒப்பந்த தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்ததை கண்டித்து நமது சங்கங்கள் சார்பாக போராட்ட அறிவிப்பு கொடுத்துள்ளோம். இதற்கு நமது மாநில நிர்வாகம் வேண்டுகோள் விடுப்பது என்ற பெயரில் ஒப்பந்த ஊழியர்கள் பிரச்சனையை கையிலெடுப்பது நிறுவனத்தின் நலனுக்கு எதிரானது என்று இன்று கொடுத்துள்ள கடிதத்தில் நமக்கு உபதேசம் செய்துள்ளது. நிர்வாகத்தின் இந்த வாதத்தை நமது தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் முற்றிலும் நிராகரிக்கிறது.

அது மட்டுமல்லாமல் வேலூர் மாவட்ட நிர்வாகம் சற்றும் கூச்சம் இன்றி உண்மைக்கு புறம்பான செய்திகளை கூறி வருகிறது. முதலில் விடுத்துள்ள டெண்டரில் இந்த 140 ஒப்பந்த ஊழியர்களில் 69 தோழர்களை கேபிள் வேலைக்கு எடுத்ததாக சொல்கிறது. ஆனால் உண்மையில் அந்த 69 பணியிடங்களில் வேலை நீக்கம் செய்யப்பட்ட தோழர்கள் 10 பேருக்கு மட்டும் தான் வேலை கொடுக்கப்பட்டு உள்ளது. அடுத்த HOUSE KEEPING டெண்டரில் 35 பணியிடங்களுக்கு மட்டுமே அறிவிப்பு கொடுக்கப் பட்டுள்ளது. எனவே 140 தோழர்களில் 95 தோழர்களை வேலையை விட்டு விரட்டுவதாகவே வேலூர் மாவட்ட நிர்வாகத்தின் போக்கு உள்ளது. நிர்வாகத்தின் இந்த போக்கினை நம்மால் அனுமதிக்க முடியாது.

எனவே 15.09.2014 முதல் காலவரையற்ற உண்ணாவிரதமும், 16.09.2014 அன்று ஒப்பந்த தொழிலாளர்களின் வேலை நிறுத்தமும், பெருந்திரள் உண்ணாவிர்தமும் நாம் திட்டமிட்ட படி கண்டிப்பாக நடைபெறும். எனவே நிர்வாகத்தின் இந்த வஞ்சக செயலை கிஞ்சித்தும் நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. இனியும் பொறுப்பதிற்கில்லை தோழா. பொங்கி எழுவோம்.

**நமது குமுறும் நெஞ்சங்கள் இரையட்டும்!**
**கோடிக்கரங்கள் இணையட்டும்!**
**நம் கோஷம் விண்ணை பிளக்கட்டும்!**
**கொடுமைக்கார நிர்வாகத்தின்**
**கோட்டை கதவுகள் நொறுங்கட்டும்!**

16.09.2014 அன்று சென்னை தலைமை பொது மேலாளர் அலுவலகம் நோக்கி நாம் அணி திரள்வோம்! BSNLக்காக உழைத்திடும் தோழர்களின் பணிப் பாதுகாப்பை உத்தரவாதப் படுத்திடுவோம்!

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

| | |
|---|---|
| **C.வினோத் குமார்** | **S.செல்லப்பா** |
| **மாநில செயலாளர்** | **மாநில செயலாளர்** |
| **TNTCWU** | **BSNLEU** |